# “மதுரையில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கப்படும்!” அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலுரை...

9ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்போது இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தைப் பிரித்து தனித்தனியாக ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் ஒரு குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றமும் அமைக்கப்படவேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தைப் பிரித்து தனித்தனியே ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் ஒரு குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றமும், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

5. திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்காக போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென திருநெல்வேலி யில் ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்காக போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, திருநெல்வேலியில் மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

6. கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்தில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்தில் மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

7. மதுரை மாவட்டம், மதுரையில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கப்படும்.

மதுரை மாவட்டம், மதுரையில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம், மாவட்ட நீதிபதி தரத்தில் தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

8. அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955ன்கீழ் நுகர்பொருள், குற்றப் புலனாய்வுத் துறையால் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையில் ஒரு சிறப்பு பெருநகர நீதித் துறை நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955ன்கீழ் நுகர்பொருள், குற்றப் புலனாய்வுத் துறையால் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க, முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் ஒரு சிறப்பு பெருநகர நீதித் துறை நடுவர் நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் சென்னையில் அமைக்கப்படும்.

9. 1881 ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, செங்கல்பட்டில் ஒரு விரைவு நீதிமன்றம் அமைக்கப்படும்.

1881 ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, நீதித்துறை நடுவர் தரத்திலான ஒரு விரைவு நீதிமன்றம் தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் செங்கல்பட்டில் அமைக்கப்படும்.

10. சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளையின் பயன்பாட்டிற்காக மின்கலத்தால் (Battery) இயங்கக்கூடிய நான்கு சக்கர வாகனங்கள் தலா இரண்டு வீதம், 4 வாகனங்கள் ரூபாய் 27.72 இலட்சம் செலவினத்தில் வாங்கப்படும்.

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளையின் பயன்பாட்டிற்காக மின்கலத்தால் (Battery) இயங்கக்கூடிய நான்கு சக்கர வாகனங்கள் தலா இரண்டு வீதம், 4 வாகனங்கள் ரூபாய் 27.72 இலட்சம் செலவினத்தில் வாங்கப்படும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

1. திருச்சிராப்பள்ளியில், மாநில சீர்திருத்த நிருவாகப் பயிற்சி நிறுவனம் அமைக்கப்படும்.

சிறை களப்பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் அளிப்பதற்காக வேலூரில் செயல்பட்டு வரும் சிறைக் காவலர் பயிற்சி மையம் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டு மாநில சீர்திருத்த நிருவாகப் பயிற்சி நிறுவனமாக அமைக்கப்படும்.

2. தஞ்சாவூர் மாவட்டத்தில் புதியதாக மாவட்ட சிறைச்சாலை அமைக்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருமலை சமுத்திரத்தில், 500 சிறைவாசிகளை அனுமதிக்கும் வகையில் புதியதாக மாவட்ட சிறைச்சாலை அமைக்கப்படும். அதற்கான புதிய கட்டடம் கட்டப்படும்.

3. மத்திய சிறை II புழலில் கூடுதலாக 1000 சிறைவாசிகளை அனுமதிக்கும் வகையில் கூடுதல் தளம் கட்டப்படும்.

மத்திய சிறை II புழலில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்காக 1000 சிறைவாசிகளை அனுமதிக்கும்வகையில் கூடுதல் தளம் கட்டப்படும். இதன்மூலம் இடநெருக்கடி குறைக்கப்படும்.

4. 9 மத்திய சிறைகள் மற்றும் புழல், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 3 பெண்கள் தனிச் சிறைகளில் காட்சிப் பலகையுடன்கூடிய பொது தகவல் அறிவிப்பு அமைப்பு நிறுவப்படும்.

9 மத்திய சிறைகள் மற்றும் புழல், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 3 பெண்கள் தனிச் சிறைகளில், சிறைவசிகளுக்கான நேர்காணல், நீதிமன்ற வழக்கு ஒத்திவைப்பு போன்ற தகவல்களை அறிவிப்பதற்காக காட்சிப் பலகையுடன்கூடிய பொது தகவல் அறிவிப்பு அமைப்பு இரண்டு கட்டங்களாக ரூபாய் 751.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

5. 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், பூவிருந்தவல்லி தனி கிளைச் சிறை மற்றும் சிறைத் துறை தலைமையகம் ஆகிய இடங்களில் 160 காணொலி காட்சியமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

சிறைவாசிகளை நீதிமன்றங்களில் நேரடியாக முன்னிலைப்படுத்தாமல் காவல் நீட்டிப்புச் செய்யவும், வழக்கு விசாரணைகளை நடத்தவும், 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், பூவிருந்தவல்லி தனி கிளைச் சிறை மற்றும் சிறைத் துறை தலைமையகம் ஆகிய இடங்களில் 160 காணொலி காட்சியமைப்பு வசதிகள் ரூபாய் 650.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

6. 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைககளில் குழந்தை நேய நேர்காணல் அறைகள் ஏற்படுத்தப்படும்.

சிறைவாசிகள் தங்கள் குழந்தைகளை அருகில் சந்திக்க ஏதுவாக குழந்தை நேய நேர்காணல் அறைகள் 9 மத்திய சிறைகள் மற்றும் 5 பெண்கள் தனிச் சிறைகளில் அமைக்கப்படும்.

7. 9 மத்திய சிறைகளுக்கு வெளிச்சுற்று பாதுகாப்பிற்காக சுற்றுக் காவல் வாகனம் வழங்கப்படும்.

9 மத்திய சிறைகளின் பாதுகாப்பை வலுப்படுத்திடும் வகையில், வெளிச்சுற்று பாதுகாப்பிற்காக தலா ஒரு வாகனம் வீதம், 9 சுற்றுக்காவல் வாகனங்கள் ரூபாய் 81.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

8. மத்திய சிறை, வேலூர், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் மத்திய சிறை II, புழல் ஆகிய சிறைகளுக்கு புதிய அவசரகால ஊர்தி வழங்கப்படும்.

அவசரசிகிச்சைதேவைப்படும்சிறைவாசிகளை வெளி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்காக, மத்திய சிறை, வேலூர், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் மத்திய சிறை II, புழல் ஆகிய சிறைகளுக்கு ரூபாய் 74.00 இலட்சம் செலவில் 4 புதிய அவசரகால ஊர்திகள் வழங்கப்படும்.

9. புழல் மத்திய சிறை வளாகத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய, பார்வையாளர் காத்திருப்புக் கூடம் கட்டப்படும்.

சிறைவாசிகளைப் பார்வையிட வரும் பார்வையாளர்களின வசதிக்காக, புழல் மத்திய சிறை வளாகத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய, பார்வையாளர் காத்திருப்புக்கூடம் கட்டப்படும்.

10. 9 மத்திய சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு 50 உடலோடு அணியும் புகைப்படக் கருவிகள் வழங்கப்படும்.

சிறைவாசிகளின் நடமாட்டத்தினை கண்காணித்திடவும் அசம்பாவித சம்பவங்களை தடுத்திடவும் 9 மத்திய சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு 50 உடலோடு அணியும் புகைப்படக் கருவிகள் ரூபாய் 35.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

11. 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள் மற்றும் தனி கிளைச் சிறை, பூவிருந்தவல்லி ஆகிய சிறைகளுக்கு கையடக்க உலோகம் கண்டுபிடிக்கும் கருவிகள் வழங்கப்படும்.

சிறைகளுக்கு வரும் நபர்கள் மறைத்து கொண்டு வரும் தடை செய்யப்பட்ட கைபேசி உள்ளிட்ட உலோகப் பொருட்களை சோதனை செய்து கண்டுபிடிக்கும் வகையில், 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள் மற்றும் தனி கிளைச்சிறை, பூவிருந்தவல்லி ஆகிய சிறைகளுக்கு கையடக்க உலோகம் கண்டுபிடிக்கும் கருவிகள் ரூபாய் 18.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**சட்டத் துறை**

1. பட்டறைப் பெரும்புதூர் மற்றும் புதுப்பாக்கத்தில் செயல்பட்டு வரும் அரசு சட்டக் கல்லூரிகளில் முறையே 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டப் படிப்புகள்

2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.

பட்டறைப்பெரும்புதூரில் செயல்பட்டு வரும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் புதிதாக 5 ஆண்டு சட்டப் படிப்பும், புதுப்பாக்கத்தில் செயல்பட்டு வரும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் புதிதாக 3 ஆண்டு சட்டப் படிப்பும் 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.

ஏனென்றால், இப்போது ஒரு இடத்தில் 3 ஆண்டுகள் மற்றொரு இடத்தில் 5 ஆண்டுகள் என்றிருக்கின்றன. ஆகவே இரண்டு இடங்களிலும் 3 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகள் சட்டப்படிப்புகள் துவங்கப்படும்.

2. ஆறு அரசு சட்டக் கல்லூரிகளில் 5 ஆண்டு மற்றும்

3 ஆண்டு சட்டப்படிப்புகளில் தலா 40 மாணவர்கள் வீதம் மொத்தம் 480 மாணவர்களை கூடுதலாக அனுமதித்தல்.

வேலூர், விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், தேனி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்புகளில் முதலா மாண்டு சேர்க்கை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை

80லிருந்து 120 ஆக அதிகரிக்கப்படும். இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 3 ஆண்டு சட்டப்படிப்பில் 240 மாணவர்களும், 5 ஆண்டு சட்டப்படிப்பில் 240 மாணவர்களும், ஆக மொத்தம் 480 மாணவர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதலாக அனுமதிக்கப்படுவர்.

ஏனென்றால், அங்கு இடம் வசதி இருக்கிறது. சட்டக் கல்லூரியிலே இட வசதி வேண்டுமென்று நிறைப்பேர் காத்திருக்கிறார்கள். எனவே, 480 பேர் கூடுதலாக இந்த ஆண்டு அனுமதிக்கப்படுவார்கள்.

3. அரசு சட்டக் கல்லூரி “மாணவர்கள் வள மேலாண்மைத் திட்டம்” உருவாக்குதல்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான அனைத்துத் தரவுகளையும் தலைமைச் செயலகம் மற்றும் சட்டக் கல்வி இயக்குநர் அலுவலகத்துடன் முழுமையாக இணைக்கும் வகையில் “மாணவர்கள் வள மேலாண்மைத் திட்டம்” (Enterprise Resource Planning) ரூ.18,00,000/ (ரூபாய் பதினெட்டு இலட்சம்) செலவில் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

4. அரசு சட்டக் கல்லூரி மாணவர்களின் தொழில்முறை திறன் மேம்படுத்தும் வகையில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் “பயிற்சி பேராசிரியர்” (Professor of Practice) என்ற சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்துதல்.

அரசு சட்டக் கல்லூரி மாணவர்களின் தொழில்முறை திறனை மேம்படுத்தும் வகையில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் ஓய்வு பெற்ற நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் சட்டப் பணிகளில் 15 ஆண்டுகள் அனுபவம் பெற்ற சட்ட வல்லுநர்கள்மூலம் “பயிற்சி பேராசிரியர்” (Professor of Practice) என்ற சிறப்புத் திட்டம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.72,00,000/ (ரூபாய் எழுபத்திரண்டு இலட்சம்) செலவில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நிதியிலிருந்து செயற்படுத்தப்படும்.

5. அரசு சட்டக் கல்லூரிகளில் ‘சட்டத்தமிழ்’ எனும் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இணைவுபெற்ற அரசு சட்டக் கல்லூரிகளில் 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் ‘சட்டத்தமிழ்’ எனும் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

எல்லோரும் தமிழ் படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசினுடைய சட்டக் கல்லூரிகளில் சட்டத் தமிழ் என்கின்ற புதிய பாடத்திட்டம் இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும்.

6. சீர்மிகு சட்டப் பள்ளியில் புதிதாக இரண்டு முதுகலை சட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியில் ‘சொத்துரிமைச் சட்டம்’ மற்றும் ‘குற்றம் மற்றும் தடயவியல் சட்டம்’ ஆகிய இரு முதுகலை சட்டப்படிப்புகள் 20242025 ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக அறிமுகப்படுத்தப்படும்.

7. சீர்மிகு சட்டப்பள்ளியில் “மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டம்” செயற்படுத்தப்படும்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் உள்ள சீர்மிகு சட்டப் பள்ளியில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் “மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டம்” ரூ. 3 கோடி செலவில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நிதியிலிருந்து செயற்படுத்தப்படும்.

8. சீர்மிகு சட்டப்பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 3505.5 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.21.56 கோடி மதிப்பீட்டில் மாணவர் விடுதி கட்டடம் கட்டப்படும். இத்திட்டம் 50% அரசு நிதி பங்களிப்பு மற்றும் 50% பல்கலைக்கழக நிதி பங்களிப்புமூலம் செயல்படுத்தப்படும்.

எனவே, பூம்புகார் தலைவனுடைய புகழ்பாடி, குறிஞ்சி மலர் நாயகனுடைய வழிநடந்து, மாமன்னன் நாயகனுக்கு துணை நிற்போம்.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு முதல் நன்றி. அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அவர்களுக்கும், முதலமைச்சருடைய செயலாளர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் N. முருகானந்தம், அவர்களுக்கும், டாக்டர் P. உமாநாத், அவர்களுக்கும், முனைவர் M.S. சண்முகம், அவர்களுக்கும் திருமதி அனு ஜார்ஜ், அவர்களுக்கும், முதலமைச்சருடைய தனிச் செயலாளர் தினேஷ் அவர்களுக்கும், நிதித் துறை செயலாளர் T. உதயச்சந்திரன், அவர்களுக்கும், எங்களுடைய உள்துறை செயலாளர் திருமதி P. அமுதா, அவர்களுக்கும், சட்டத் துறை செயலாளர் S. ஜார்ஜ் அலெக்சாண்டர் அவர்களுக்கும், சட்டத் துறை, நீதித் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தத் துறை சார்ந்த உயர் அதிகாரிகள் அத்தனை பேருக்கும், இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போல பொறுமையோடு இருந்த நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் இங்கு வருவதற்கு காரணமாக இருந்த திருமயம் தொகுதி மக்களுக்கும், புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைக் கூறி, விடைபெற்றுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலுரை வழங்கினார்.

## சட்டக் கல்லூரிகளில் ‘சட்டத் தமிழ்’ எனும் புதிய பாடத்திட்டம் அறிமுகம்!

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அலமேலு அப்பாதுரை
### ஜூன் 27 (2001)



தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## நீட் நுழைவுத் தேர்வு முறைகேடு விவகாரம்!

### ஒன்றிய அரசு நியமித்த குழு டெல்லியில் ஆலோசனை!


புதுடெல்லி, ஜூன் 27-

நீட் தேர்வு முறைகேடுகளை விசாரிப்பதற்கும், தேசிய தேர்வு முகமையை மாற்றி அமைப்பதற்கும் ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழுவின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

நாடு முழுவதும் நடைபெற்ற நீட் தேர்வில் பெருமளவு முறைகேடுகள் நடைபெற்றன. கேள்வித்தாள் கசிவு, மாணவ, மாணவிகளிடம் லட்சக்கணக்கில் பணம் பெற்று கொண்டு ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதியது உள்ளிட்ட மோசடிகள் அரங்கேறின. நீட் முறைகேட்டைக் கண்டித்து நாடு முழுவதும் மாணவர்கள், அரசியல் கட்சியினர் உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனையடுத்து நீட் தேர்வு முறைகேடுகள் குறித்து சி.பி.ஐ., விசாரணைக்கு ஒன்றிய அரசு உத்தரவிட்டது. முதுநிலை மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வையும் ரத்து செய்து ஆணையிடப்பட்டது.

தொடர்ந்து, நீட் தேர்வு முறைகேடுகளை விசாரிப்பதற்கும், தேசிய தேர்வு முகமையை மாற்றி அமைப்பதற்கும் ஆலோசனை வழங்க இஸ்ரோ முன்னாள் தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழு ஒன்றையும் ஒன்றிய அரசு நியமித்தது. இந்நிலையில், இந்த குழுவின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் தொடங்கி நடைபெற்றது.

---



## சட்டப்பேரவையில் குறள்!

சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம், பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த குறளும் அதற்கான கலைஞர் உரையும் வருமாறு:-

**குறள்:**

**“மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்.”**

**கலைஞர் உரை:** பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையாம் ஒப்புரவு உடையவனிடம், செல்வம் சேர்ந்தால் அது ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. மணிமேகலை
### ஜூன் 27 (2017)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

மெரட்டூர் கிளைச் செயலாளர், மீஞ்சூர் ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களை திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தொடங்கி மகளிரின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.